இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 234 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 21 – வெள்ளிக்கிழமை 04 ஏப்ரல் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 234 : Thiruvalluvar Year - 2056 - Panguni 21 - Friday 04 April 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

### தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள், வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட

# கச்சத் தீவை மீட்பதே நிரந்தரத் தீர்வு!

## ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டப்பேரவையில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்: ஏகமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, ஏப்.4 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.4.2025) சட்டமன்றப் பேரவையில், கச்சத்தீவை திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடி யாக மேற்கொள்ள வேண்டும் என்றும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கச்சத் தீவு மீட்பு தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதை கனத்த இதயத்தோடு இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். முற்றுப்புள்ளி வைக்க முடியாத தொடர் பேரழிவாக இது அமைந்திருக்கிறது. அங்கு எத்தனை அரசியல் நிலைமைகள் மாறினாலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது மட்டும் இன்னும் மாறாமல் இருக்கிறது.

**தமிழ்நாட்டு மீனவர்களை மறந்துவிடும் ஒன்றிய அரசு!**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதை ஒன்றிய அரசு அடிக்கடி மறந்துவிடுகிற காரணத்தால், நாம் மீண்டும் மீண்டும் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது? கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். கடல் நீர் இன்று ஏன் சிவப்பாக இருக்கிறது? தமிழ்நாட்டு மீனவர் சிந்திய இரத்தத்தால் என்று சொல்ல வேண்டிய கவலையான நிலைமையில் தான் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் ஒரு மீனவர்கூட கைது செய்யப்பட மாட்டார் என்று 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நரேந்திர மோடி அவர்கள் சொன்னார்கள். ஆனாலும், இந்தத் தாக்குதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இலங்கையில் சில மாதங்களுக்கு முன்னால் ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.4.2025) சட்டமன்றப் பேரவையில், கச்சத்தீவை திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

> **“கச்சத்தீவு விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், கச்சத்தீவை மாநில அரசுதான் இலங்கைக்கு அளித்தது போன்று ஒரு தவறான தகவலைப் பரப்பி அரசியல் செய்வது அரசியல் கட்சிகளுக்கு வழக்கமாகி விட்டது. ஆனால், அரசியல் ஆதாயத்திற்காக கட்சிகள் செய்யும் அதே தவறை ஒன்றிய அரசு செய்வது வருந்தத்தக்கது; ஏற்கமுடியாதது. கச்சத்தீவைப் பொறுத்தவரைக்கும், அந்தத் தீவைக் கொடுத்து, ஒப்பந்தம் போட்ட போதே முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். தமிழ்நாட்டு மக்கள் அதை விரும்ப மாட்டார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.”**

ஏற்கெனவே இருந்தவர்கள் தோல்வியடைந்து, புதியவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆனாலும், தமிழ்நாட்டு மீனவர்கள் நிலைமை மாறவில்லை; மீனவர்கள் மீதான தாக்குதல் ஓயவில்லை. பாரம்பரிய மீன்பிடி உரிமை கொண்ட நம் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது தொடர்ந்து சிறைபிடிக்கப்படுகிறார்கள்; படகுகள் இலங்கை அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

மார்ச் 27 அன்று, நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள், 97 இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறையில் இருக்கிறார்கள் என்று ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில், 11 பேரை கடந்த 27 ஆம் தேதி இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. கடந்த 2024 ஆம் ஆண்டு மட்டும் 530 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் சொன்ன கணக்குப்படி பார்த்தால், ஒரு நாளைக்கு இரண்டு மீனவர்களை கைது செய்துள்ளார்கள்.

**இரக்கமற்ற நிலையில் நடந்துகொள்ளும் இலங்கை அரசு!**

எல்லைதாண்டி வந்தார்கள் என்று சொல்லி அவர்களுக்கு அதிகபட்ச சிறை தண்டனை விதிக்கப்படுகிறது அல்லது அதிகபட்ச அபராதம் விதிக்கப்படுகிறது. அண்டை நாடாக இருந்து கொண்டு இந்திய மீனவர்கள் மீது எந்தவிதமான இரக்கமும் இல்லாமல், நம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும்விதமாக, ஏன் அடியோடு பறிக்கும்விதமாக இலங்கைக் கடற்படையினரும், இலங்கை அரசும் நடந்து கொள்வது நமக்கெல்லாம் மிகுந்த கவலையளிக்கிறது; கண்டிக்கத்தக்கது. இதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு தடுத்து நிறுத்திட வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சவாலாக இருக்கிறது என்று ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதில் என்ன சவால் இருக்க முடியும் என்று தெரியவில்லை. வேறொரு மாநில மீனவர்கள் இப்படி தொடர் தாக்குதலுக்கு உள்ளானால், இப்படித்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பார்களா? தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து தமிழ்நாடு அரசின் சார்பில் நான் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டு வருகிறேன். இதுவரைக்கும் மீனவர்கள் கைது, தாக்குதல் குறித்து 74 கடிதங்களை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், பிரதமர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறேன். பிரதமர் அவர்களை நேரில் சந்திக்கும் போதெல்லாம் இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறேன். இரு நாட்டு மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்பட இயலாமல் கடந்து கொண்டிருக்கிறது.

**தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் கடும் பாதிப்பு!**

கடிதம் எழுதினால் விடுவிப்பது, பிறகு கைது செய்வதென்று இலங்கை அரசின் நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருப்பதால், தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டு, பாரம்பரிய மீன்பிடி உரிமை கேள்விக்குறியாகி,

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### தொகுதி மறுவரையறை: கூட்டுக் குழுவின் தீர்மானங்களை நேரில் வழங்க

# நேரம் ஒதுக்கக் கோரி பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஏப்.4-**

**நியாயமான தொகுதி மறுவரையறைக்கான கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தின் தீர்மானங்களை அளித்திட பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்திக்க நேரம் கேட்டு பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதி இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக கடந்த ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து, தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் கடந்த மார்ச் 5ல் நடத்தப்பட்டது.

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நமது நியாயமான கோரிக்கைகளையும், அவைசார்ந்த போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டு, இதற்காக கூட்டு நடவடிக்கைக் குழு ஏற்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான முன்னெடுப்பு நடவடிக்கையாக, கூட்டு நடவடிக்கைக் குழுவின் முதல் கூட்டம் சென்னையில் கடந்த மார்ச் 22ஆம் தேதி நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கேரளம், தெலங்கானா, பஞ்சாப் மாநில முதல்வர்கள், கர்நாடக மாநில துணை முதல்வர் உள்ளிட்ட முக்கியக் கட்சிகளின் தலைவர்கள் நேரில் பங்கேற்றனர்.

**பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்!**

தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை தொடர்பாக பிரதமர் மோடியை நேரில் சந்திக்க நேரம் கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (ஏப்ரல் 1) கடிதம் எழுதியுள்ளார்.



M.K. STALIN
CHIEF MINISTER OF TAMIL NADU

SECRETARIAT
CHENNAI - 600 009.

D.O. Letter No. 1445 / CMO / 2025, Dated: 27-03-2025

Dear Prime Minister,

Vanakkam.

I extend warm greetings from Tamil Nadu and hope this letter finds you well.

I write to request an audience with you, alongwith select Members of Parliament from various political affiliations, to present a Memorandum on Delimitation that emerged from our recent deliberations.

On March 22, 2025, Chennai hosted the inaugural Joint Action Committee (JAC) meeting on 'Fair Delimitation' – a historic gathering that brought together Chief Ministers, Deputy Chief Minister, and prominent leaders representing diverse political ideologies from across India.

The voices emerging from our deliberations transcend political boundaries, embodying the concerns of citizens from diverse regions who seek fair representation in our parliamentary democracy.

As this issue holds significant importance to our states and citizens, I kindly request a meeting with you to formally submit the Memorandum on behalf of the Joint Action Committee.

Thank you for your time and consideration. I look forward to your positive response at the earliest.

With warm regards,

Yours sincerely,

(M.K. STALIN)

To
Thiru. Narendra Modi,
Hon'ble Prime Minister,
Prime Minister's Office,
South Block, Raisina Hill,
New Delhi – 110 011.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், **“தமிழ்நாட்டிலிருந்து எனது அன்பான வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**கடந்த மார்ச் 22ஆம் தேதி சென்னையில் ‘தொகுதி மறுவரையறை’ குறித்த கூட்டு நடவடிக்கைக் குழு (JAC) கூட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது.**

**இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டமானது, இந்தியா முழுவதிலுமிருந்து பல்வேறு அரசியல் சித்தாந்தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர் மற்றும் முக்கியத் தலைவர்களை ஒன்றிணைத்தது.**

**இந்த விவகாரத்தில் அரசியல் எல்லைகளை கடந்து அனைவரின் குரலும் நியாயமான தொகுதி மறுவரையறை நடத்த வேண்டும் என்று எதிரொலித்துள்ளது.**

**இந்தப் பிரச்சினை நமது மாநிலங்களுக்கும் குடிமக்களுக்கும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய மனுவை அனைத்து கட்சி எம்.பி.க்கள் அடங்கிய குழுவுடன் உங்களிடம் நேரில் வழங்க நேரம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விரைவில் உங்கள் நேர்மறையான பதிலை எதிர்பார்க்கிறேன்”** என்று தெரிவித்துள்ளார்.

**சமூக வலைதளப் பதிவு!**

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**பிரதமர் நரேந்திர மோடி அவர்களே,**

**சென்னையில் 22.03.2025 அன்று நடைபெற்ற நியாயமான தொகுதி மறுவரையறைக்கான கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தின் தீர்மானங்களை, பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தங்களிடம் நேரில் அளித்து, தொகுதி மறுவரையறை தொடர்பான எங்கள் கவலைகளை தெரிவிக்க நேரம் கேட்டிருந்தோம்.**

**ஏற்கனவே கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த முக்கியப் பிரச்சினையில் எங்களது ஒன்றுபட்ட நிலைப்பாட்டைத் தெரிவிக்க தங்களை உடனடியாகச் சந்திக்கக் கோருகிறோம். தங்களது விரைவான பதிலுக்காகக் காத்திருக்கிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.